ஐ.சாட்சி

மீட்பு ஆண்டவருடையது.

(தி.பா,சங்-68;20)

இந்தோனேஷியாவில் ஒரு முஸ்லிம் சகோதரி தன் வீட்டின் ஜன்னல் வழியாக வந்து விழுந்த புதியஏற்பாட்டை எடுத்து படிக்க ஆரம்பித்தாள். படிக்க படிக்க இயேசுவின் அன்பு அவளை ஈர்ந்தது கிறிஸ்துவைக் குறித்து

இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள அவள் உள்ளம் ஏங்கினது. கடைசியில் அவள் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் கண்டு பிடித்து. யாருக்கும் தொரியாமல் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு சென்றாள். மிகுந்த மகிழ்ச்சியோடு வீடு திரும்பிய அவளை கோபமாய் இருந்த அவள் கணவன் வரவேற்றான். "கிறிஸ்தவ ஆலயத்திற்கு சென்றாய்"

கோப வெறியில் கண்டு கண் மூக்கு என்று பாராமல் அடித்து நொறுக்கி விட்டான். அடுத்த ஞாயிறுக்கிழமை வந்தது. கணவன் வீட்டில் இல்லை. ஆராதனை நேரம் அவளால் ஆர்வத்தை அடக்க்முடியவி ல்லை, துணிவை வரவழை த்துக் கொண்டு, ஆலயத்து க்கு வந்துவிண்டாள், முடிவி ல் போதகர் "அடுத்தவாரம் திருவிருந்து ஆராதனை

எல்லோரும் ஆயத்தமாய் வருங்கள்" என்று அறிவிப்பு கொடுத்தார் இந்த சகோதரி அருகிலிருந்த வயதான பெண்ணிடம் "திருவிருந்து என்றாள் என்ன" என்று விசாரித்தாள். அதற்கு அந்த வயதான பெண் "திருவிருந்து என்றால் இயேசுவின் இரத்தத்தையும் மாம்சத்தையும் புசிக்க கொடுப்பார்கள். இதுதான் திருவிருந்து அல்லது இராப்போஜனம்

என்று கூறப்படுகிறது" என்று விளக்கிளாள், குழந்தை உள்ளம் கொண்ட அந்த முஸ்லிம் பெண் உண்மையிலேயே இயேசுவின் இரத்தத்தையும் மாம்சத்தையும் கொடுப்பார்கள் என்று நம்பிவிட்டாள். வீட்டுக்கு திரும்பியபோது அவளுக்கு அடியும் உதையும் காத்திருந்தது. அடுத்தவாரம் ஞாயிற்றுக்கிழமை அவள் அதிகாலையில் எழுந்து மிக வேக

மாக சமையல் மற்றும் எல்லா காரியங்களையும் முடித்துணிமாற்றி விட்டு கணவனிடம் வந்து "ஐயா என்னை அடிப்பதாகயிருந்தால் இப்பொழுதே அடித்துவிடும். நான் எப்படியாவது இந்த வாரம் கிறிஸ்தவ ஆலயத்துக்கு செல்லபோகிறேன். ஏனெனில் இன்று இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தையும் மாம்சத்தையும் தரப்போகிறார்கள்" என்றாள் இதைக் கேட்

டுக்கொண்டிருந்த கணவன் வேகமாய் போய் தன் பீரோவில் இருந்த பெரிய கத்தியை எடுத்துக்கொண்டு வந்து அதை மேஜையின் மீது போட்டான். "நான் ஒரு வைராக்கியமான முஸ்லிம் இந்த ஏமாற்று வித்தைகளை எல்லாம் நம்பமாட்டேன். நீ அந்த கிறிஸ்தவ ஆலயத்திற்கு போ, வரும்போது அந்த கிறிஸ்துவின் மாம்சத்தை கொண்டுவரவேண்டும்,

இல்லாவிட்டால் உன் கழுத்
தில் தலை இருக்காது. நிச்ச
யமாகவே வெட்டி போடுவே
ன். என்று கத்தினான். அவ
ள் ஆலயத்துக்கு வந்தாள்,
திருவிருந்து ஆராதனை நே
ரம் வந்தது அவளுக்கு பெரி
ய ஏமாற்றம். அவள் கையி
ல் கொடுக்கப்பட்டது ஒரு
ரொட்டித்துண்டு, அவள் பரு
க கிடைத்தது திராட்சைரசம்
, மிக வேதனையோடு அரு
கில் உள்ளவரிடம் விசாரித்

தாள், அதற்கு அவர்கள் இயேசுவின் மாம்சத்துக்கு அடையாளமாகவே இந்த அப்பமும் இரத்தத்திற்கு அடையாளமாகவே திராட்சைரசமும் கொடுக்கப்படுகிறது" என்று வுளக்கினார்கள். ஆராதனை முடிந்து எல்லோரும் வீடு திரும்பினார்கள் இந்த சகோதரியே எழுந்திருக்கவில்லை. ஏமாற்றமும் பயமும் நிறைந்தவளாய் நடுங்கிக் கொண்டிருந்தா

ள் அவள் ரொட்டித்துண்டை (அப்பத்தை)புசிக்கவில்லை கணவருக்கு என்ன பதில் சொல்வது அவர் நிச்சயமாக தலவயை வெட்டி போடுவார் பிள்ளைகள் நிலை என்ன ஆகும்? ஆயிரம் ஆயிரம் கேள்விகள் அவள் உள்ள்தில் அலை மோர்தின ! ஆலயத்தை பூட்டும் நேரம் வந்தபடியால் வேறு வழியில்லாமல் எழுந்து விட்டை நோக்கி நடந்தாள். அவள்

உள்ளம் அவளை அறியாம
லே ஜெபிக்க ஆரம்பித்தது.
வீட்டுக்கு வந்து கதவைத்
திறந்தள் அவன் கையில்
பள பளக்கும் கத்தி இருந்த
து. "எங்கே இயேசுவின்
மாம்சம் என்று அவன் உரு
மினான், கண்ணிர் கொ
லை வெறி தாண்டவமாடிய
து அவள் கையை நீட்டி திற
ந்தாள். கிறிஸ்து இமைப்
பொழுதில் அவளுக்காக
ஒரு அற்புதத்தை செய்தார்.

அவள் கையில் ரொட்டி இல்லை கிழிக்கப்பட்டு சிதைந்து போன மாமிச துண்டு, அதைக்கண்ட மாத்திரத்தில் அவள் கணவன் அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை அள்புள்ள இயேசு தனக்காக அற்புத்தத்தை செய்ததை மகிழ்ச்சிக் கண்ணீரோடு சாட்சி பகிர்ந்தாள். அந்த சகோதரி அவள் கணவனும் பிள்ளைகளும் இன்றும் கிறிஸ்துவின் குடும்பமாக

இந்தோனேஷியாவில் ஜீவிக்கிறார்கள்.

பூமியின் எர்லையெங்கும(ள்ளவர்களே ! என்னை நோக்கிப்பாருங்கள் ; (ஏசா-44;22)

(Via) Bro.SAM,+91 94882 74660

A.குசைபிச்சகயா,தூ.டி.

பேசி+91 94890 22642

pitchaiah64@gmail. com